உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௰.]	ஜய௵—ஆடி-மீ	[பகுதி-௯.
Vol. 50.	July—August 1954.	No. 9.

சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்

திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.

(230-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் சுதஞ்சணன் தொழுதுசென்ற வரலாற்றால், துணை வேண்டாமலே செருவில் பகையைவென்று வாழவல்லவன் சீவகன் என்பது பெறப்பட்டது. இனிக் குணமாலையைக் கோள்விடுத்த வரலாற்றால், தன்னுயிரைப்பேணாது பிறரை வாழ்விப்பதே தனக்குப் பெருவாழ்வெனப் பேணியவன் சீவகன் என்பது பெறப்படும்.

மூதூர்எடுத்த புதுநீர்விழா அணி முற்றியபின்னர், நகரமாந்தர் தத்தம் ஊர்திகளிலேறி உறைவிடம் திரும்பினர். தேரும் சிவிகையும் பிணங்கிச் செறிய, மாவும் பிடியும் களிறும் மயங்கி[illegible]னால் அரசன் கட்டியங்காரனது அசனிவேகமென்னும் யானை பாகருக் கடங்காமல் மதங்கொண்டு, காற்றினுங் கடலினுங் கூற்றினுங் கொடியதாய் உருமேறும் ஊழித்தீயும்போல, நகரமெங்கும் கலியத் தொடங்கிற்று. அதுகண்டு யாவரும் உயிர்பிழைக்க உழந்து, பரிதிமுன்னர்ப் பன்மீன்போல, நின்றநிலையிலே யானையின் கண்

னுக்கு அகப்படாமல் மறைந்தனர். குணமாலை சிவிகையின் குற்றிளையவரும் அதனைக் கைவிட்டு அப்பால் ஏகினர். அதனால் அக் குஞ்சரம் குணமாலையையே கொல்லுதல்குறித்துச் சென்றது.

அதைக்கண்ட சீவகன் அஞ்சி நடுங்கினான். 'வேழம் நான்கு வெல்லும் ஆற்றலன்' (689) ஆகிய அவன் யானையின் சீற்றத்திற்கு அஞ்சினானல்லன். மற்றுத் தான் உதவுவதற்கு முன்னே அது குணமாலையைக் குறுகிவிட்டால் என்செய்வதென்றே அஞ்சினான். பின்பு அவளைவிட்டுத் தன்னை நோக்கி அது ஓடிவந்தபோது, அவன் இவ் வச்சந்தவிர்ந்து ஆறுதலடைந்தான் என மேல்வருவது இதற்குத் துலக்கு.

ஆற்றலங் குமரன் தன்மேல் அடுகளி றேட அஞ்சான்
கோற்றொடிப் பாவை தன்னைக் கொண்டுயப் போமின் என்றான். (981)

எனத் தேவர் இதனைக் குறிப்பாகத் தெளியவைத்தனர். இனி, அக் களிற்றுவேந்தான கட்டியங்காரன் கடுஞ்சினத்திற்கும் அவன் அஞ்சினானல்லன், ஏனெனில் இன்னும் ஓராண்டெல்லையில் தன் கையால் அப் பகைவன் மாய்வது சரதமேயன்றோ?

கிளையழ என்னை வாள்வாய்க் கீண்டிட லுற்று நின்றான்
தளையவிழ் கண்ணி சித்தத் தன்தலை நிலத்த தன்றே (1115)

என்பது சீவகனெஞ்சில் சிலையெழுத்தாகப் பதிந்திருந்தது. அத் தகையவன் இங்ஙனம் குணமாலையின் ஏதங்கண்டே அஞ்சின னென்ன வேண்டும்.

ஒரு பெண் உயிர்மாள நோக்கி வாழ்வதைக் காட்டிலும் சீவகனாகிய தான், சாதலே நன்றென்று தேறினன்.

பெண்ணுயிர் அவலம் நோக்கிப் பெருந்தகை வாழ்விற் சாதல்
எண்ணினன் (978)

என்ற சிந்தாமணிப்பொருள் சிந்திக்க இனியது. இதனுள் 'வாழ்விற் சாதல் எண்ணினன்' என்றது மிக்கநயமுடைத்து. குணமாலை

யைக் காவாவிடில், பிறரைச் சீவிக்கச்செய்து தானும் சீவிக்கவல்லன் என்ற சீவகப்பெயரின் செழும்பொருளனைத்தும் சோரப்போன்றும் என்னும் கருத்தால், இங்ஙனம் எண்ணினான்; என்றார். இவ்வெண்ணத்தின் பெருமை கருதியே, இங்குச் சீவகனைப் 'பெருந்தகை' எனவும் தேவர் வழங்குவாராயினர்.

'பெண்ணுயிர் அவலம்நோக்கி வாழ்தலினும் சாதல் நன்று' என்றது, குணமாலை உயிர்க்கு உறுகண் நோக்கியும் உதவமாட்டாது வாழ்தல், சாதலினும் தீது என்றவாறு. எனவே, தாந்தாம் உயிர்பிழைக்க ஒளிந்த ஆடவர் பிறர் அனைவர் வாழ்க்கையும், இத்தகைய சாதலே ஆயிற்றென முடிந்தது.

அரும்பெற லவட்குத் தோழி ஆடவ ரில்லையோ? (975)

என அரற்றினள் என்ற கூற்றிலும் இக் கருத்து அரிதாகப் பொதிந்துள்ளது. இந் நிலையில் சீவகன் ஒருவனே சீரியவாழ்வுடை ஆடவனாக, தனக்குக் கருவிற்பகையான கட்டியங்காரனால் நேரும் இழிதக்க சாவும் இனிதென்று ஏற்கத் தயங்கானாயினன். இவ்வாற்றால், சீவகன்பெயர் விளக்கத்திற்குச் சிறப்பாகப் பயன்படுவது இவ் வரலாற்றுப் பகுதி என்பது சொல்லவும் வேண்டுமோ?

இங்ஙனம் பிறரைவாழ்விப்பதே பெருவாழ்வெனப் பேணிய சீவகன், தன் கலைவன்மையால் களிற்றினை அடக்கி அப்பால் அகற்றினன். அதனால் குணமாலை உயிருய்ந்து போயினள். தனக்குப் பகையல்லாத குஞ்சரத்தையும் அவன் கொல்லாது வாழ்வித்தனன். இது நிற்க.

இக் களிறுதரு புணர்ச்சிப்பின்னர்க் குணமாலை, 'காமம் கைம்மிக வேமென் நெஞ்சம்; சீவகசாமியைத் தருமின்' எனத் தெய்வங்களை வேண்டினள் (996). உய்யலாம் வாயில் ஒன்றுமில்லாமையால் 'மடலூர்வேன்' என மனத்தால் வலித்தனள். ஆயினும் தன் பெண்தன்மைக்கு ஏலாதென அதனைப் பேணாது கைவிட்டனள்;

பின்னரும் அவள் நாணும் குலனும் நன்மைகீழ்ப்பட, சீவகனிடம் சொல்லுமாறு கிளியினைத் தூதுபோக்கிக் கூடவிழைந்து வாடியிருந்தனள் என்பர். இச் செய்தி, அவன் பொருவிறந்த ஆண்டகைமை புலனாகச்செய்து, உலகினர்வாழ்க்கைக்கு உயரிய எடுத்துக்காட்டு சீவகன் என்ற மெய்ம்மையை வலியுறுத்த வல்லது.

இனித் தூதுசென்ற கிளி குணமாலை நிலைமைகூறும் பகுதியும் இ[illegible]ம் மிக அழகுவாய்ந்தது. 'சீவகசாமி! வளைகழல அமையுமோ? (1027) என்கிருள் அவள்' என உரைத்து,

> மன்னும் யான் உணரலேன் மாதர் உற்றநோய்
> துன்னி நீ அறிதியோ தோன்றல் ... 1028

என்று சொல்லிமுடித்தது அக் கிளி. இக்குச் 'சீவகசாமி!' என்பதன் நயம் முன்னரே மொழிந்தது. 'என் உயிரைக் காத்தவனே!' என்பது அவ்விளியிற் புதைபொருளாக வெளிப்படுத்தினர் நச்சினார்க்கினியர்: 'என் உயிரைக் காத்தவனே! அவ் வருந்தம் இப்பொழுது உடலைக் காத்தற்கு அரியதோ? என்னுங் கருத்தால், வளைகழல அமையுமோ என்ருள்:' என்பது அவருரை. இதுவும் சீவகப்பெயர்ப் பொருள் இன்னதென ஒருதலையாக உணர்த்துமன்றோ?

இவ்வாறு காதல்நோயுழந்த குணமாலையைச் சீவகனே மீண்டுமொருகால் சீவிக்கச்செய்ய வேண்டியதாயிற்று.

> செத்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோர் இன்னுரைதாம்
> தந்தாரேல் தந்தாரென் இன்னுயிர் தாம் தாராரேல்
> அந்தோ குணமாலைக் காதாகா தென்றுலகம்
> நொந்தாங் கிழமுயன்று நோற்றானும் எய்துவனே (1036)

சீவகனை எய்தாவிடில் அவள் இறந்துபாடு கருதினள் என்பது இதனால் போதரும். இந்நிலையில் அவட்கு மறுமாற்றமாகச் சீவகன் விடுத்த ஓலைப்பாசுரம் உயிர்மருந்தாக உதவாநின்றது.

கொடுஞ்சிலையான் ஓலை குணமாலை காண்க
அடுந்துயரம் உள்சுடவெந் தாற்றாதே னாற்ற
விடுந்த சிறுகிளியால் விம்மல்நோய் தீர்ந்தேன்
நெடுங்கணாள் தானும் நினைவகல்வா ளாக. (1041)

என்பது அதன் முகப்பின்கண் அமைந்ததாம். இங்குக் 'கொடுஞ் சிலையான்' எனச் சீவகன் தன் ஆற்றலைத் தானேவியந்துகொண்டான்.

கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப (தொல். கற்பு. 40)

என்னும் இலக்கணத்தால் இது குற்றமாகாமை அமைந்தது. 'விடுத்த' எனற்பாலது 'விடுந்த' என மெலிந்துநின்றது. சிறிய வடிவினதாயினும் செய்யும் காரியம் பெரிய அளவினது, என்னும் வியப்பால், 'சிறுகிளி' எனப் போற்றிக்கூறினான். 'ஆற்றாதேன் ஆற்ற விடுத்த சிறுகிளி' என்றதும் அரிய நயமுடைத்து. குணமாலை தன் ஆற்றாமை தீர்ந்து ஆற்றுதற்பொருட்டு விடுத்த கிளியை, சீவகன் தன் ஆற்றாமை தீர்ந்து ஆற்றுதற்பொருட்டே அவள் விடுத்தாளாகத் தன் பெருந்தகைமைதோன்றப் பேசினன். இஃது அவள் நெஞ்சினை வலியுற நிறுத்துதற் பயத்ததாம். இன்னோரன்ன வன்புறைக்கிளவியின் அன்புடைமைகண்டு அவள் காதல்வாழ்வு தளிர்த்தலால், மீண்டும் உயிர்உய்யப் பெற்றனள்.

இனி இருவர் மணமும் மங்கலமரபின் இனிது நிறைவெய்திற்று. குணமாலைக்குச் சீவகன் அமைந்தான்; சீவகனுக்குக் குணமாலை அமைந்தாள்; என யாவரும் சேரவியந்து புகழ்ந்து போற்றினர். இத்தகைய மணவினைமாண்பினை,

பருகற் கமைந்த அமிர்தின் படர் தீர்க்க லுற்றார் (1062)

என்று இனிக்கப்பாடி இன்புறுகின்றார் சிந்தாமணிகவி. இங்கே 'பருகற்கமைந்த அமிர்து' என்றதில் இன்பம் ஆழ்ந்து அநுபவிக்க உரியது. இது குணமாலையைக் குறிக்கும் தொடர். வாளா அமிர் தென்னாது 'பருகற்கமைந்த' என்ற அடையால், சீவகன் நுகர்தற்கு

மிகுதியும் தகுதிவாய்ந்தவள் அவள் என்பது குறிப்பாற் பெறப் படும். பருகுவான்—சீவகன். அமிர்தினை நோக்கிப் பருகுவான் எய்தும் படர், அப் பருகுவானை நோக்கி அமிர்து எய்திற்று; என இங்குக் கூறிய கவிசாதுரியம் எண்ணி இன்புறுந்தகையது. படர்—வருத்தம். இத்தலை படும்பாடு அத்தலை பட்டது என்பதாம். இருவரும் பெருவிருப்புற்று ஒருமிக்க இன்பந்துகர்ந்தமை இதனால் இனிது விளங்குமன்றோ?

கண்டவர்கண்ணெல்லாம் தாழும் காமுகர்போ லல்லாமல், தன்னை ஒப்பான தனிப்பெருந் தலைவியரிடமே இன்பநுகர்தற்கு இசைபவன் சீவகன். முன்னரே காந்தருவதத்தையின் ஊடற் காலத்து, இவ் வுண்மை அவனால் வெளியிடப் பெற்றது.

கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே
மேவிப்பூங் கங்கையுள் விழையும் அன்னமே (1017)

என்றது காணலாகும். 'கங்கையிலே மேவி அதனை விரும்பிய அன்னம், மணலூற்று நீரிலே அணுகச் செல்லாதே!' என்பது இதன் பொருள். 'கூவலிற் செல்லாதெனவே கங்கையை நிகர்க்கும் யாற்றிலே செல்லுமென்பதாயிற்று; எனவே குணமாலை மரபுங்கூறி அவளை வரைதலும் முறைமையென்று கூறினாரும்:' என்ற விசேட உரை இங்கு விளக்கமாக வுள்ளது. இதனால் சீவகனது தன்னேரில்லாத தலைமை சிறிதும் பழுதுறுவதின்று; குணமாலை வதுவையால் அவன் குணங்கள் மேன்மேல் உயர்ந்தன எனவே குறிக் கொள்ளத் தகுவதாம்.

(தொடரும்)

சகுனத்துள்—காகம்

(பிரகத்சங்கிதையுள் கண்டவை)

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

கீழ்நாடுகளில் காகம் வலமாதல் நற்சகுனமாகக் கருதப்படுகிறது. ஆனால், இடமாவதுதான் நன்மை தரும். காகம் வைகாசி மாதத்தில் நன்கு தழைத்த மரத்தில் கூடு கட்டினால் உணவுப் பொருள்களும் ஏனைய வளங்களும் மிகுதியாம். முள்ளுள்ள மரம், உலர்ந்த மரம், பட்டுப் போன மரம் ஆகியவைகளில் கூடு கட்டினால் நாட்டில் பஞ்சம் உண்டாம். காக்கையின் கூடு மரத்தின் கிழக்குக் கிளையிலிருந்தால் அவ்வாண்டில் முதல் மழை குளிர்காலத்தில் (செப்டம்பர் மாதம்) பெய்யும். அது மேற்குக் கிளையிலாயின் கார்காலத்தில் முதல் மழை பெய்யும். தெற்கு அல்லது வடக்குக் கிளையிலாயின் மேற்குறித்த இரண்டு பருவங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் மழை பெய்யும். மரத்தின் உச்சியிலிருந்தால் அந் நான்கு மாதங்களிலும் நன்மழை பொழியும். தென்கிழக்குக் கிளையிலாயின் கண்டா விருஷ்டி; தென்மேற்குக் கிளையிலாயின் அப் பருவகாலப் பயிர் வளந்தரும். மற்ற இருபக்கக் கிளைகளிலாயின் உணவுப் பொருள் மிகுதியாய் விளையும். வடமேற்குக் கிளையிலாயின் எலிகள் அதிகரிக்கும். காகம், நாணல், தருப்பை, புதர், குழி, கோயில், வீடு ஆகிய இடங்களில் கூடு கட்டினால் நாட்டில் கள்ளர் பயமாம்; தண்ணீர் அரிதாம்; நோய்பரவும். காகம் இரண்டு, மூன்று, நான்கு முட்டைகளிடுமாயின் நாட்டில் உணவுப் பொருள் மிகும்; ஐந்து முட்டைகளிடுமாயின் மன்னர் மாறுபடுவர். காகம் ஒரே முட்டையிடினும், முட்டையே யிடாவிட்டாலும் முட்டைகளை எறிந்துவிடுமாயினும் நாட்டுக்கு நன்மையில்லை. காக்கைக் குஞ்சு கௌரகம் என்னும் வாசனைப் பொருளின் நிறத்தோடிருந்தால் நாட்டில் கள்ளர் பயமாம்; பலநிறக் கலப்பாயின் நாட்டில் மரணம் மிகும்; வெண்மையாயின் நெருப்பால் பயம். நொண்டியாயின் பஞ்சம் மிகும்.

காகம் எக்காரணமுமின்றி ஊரிடையில், கும்பலாகக் கூடிக் கத்துமாயின் நாட்டில் பஞ்சமுண்டாம். அவை வட்டமாகப் பறக்குமாயின் ஊர் பகைவரால் முற்றுகை யிடப்படும். அவை பல கும்பல்களாகப் பிரிந்து காணப்படுமாயின் நாட்டில் துன்பம் மிகும். காகம் சிறகு அல்லது அலகினால் அச்சமின்றி மக்களை அடிக்குமாயின் நாட்டில் பகைவர் மிகுதியாவர். இரவில் பறந்து சென்றால் மக்கள் மடிவர்.

எலும்பு, சாம்பல், மயிர், இலை முதலியவைகளைக் கட்டிலின் மேல் காகம் கொணர்ந்து போடுமாயின் அக்கட்டிலை யுடையார்க்கு மரணம் கிட்டும்; பிரதிமை, மலர் போன்றவைகளை எறியுமாயின் அக் கட்டிலுடையார்க்கு ஆண்மகவு பிறக்கும்; புல், குச்சி போன்றவைகளை எறியுமாயின் அக் கட்டிலுடையார்க்குப் பெண்மகவு பிறக்கும். ஊர்தி, கருவி, மிதியடி, குடைநிழல் போன்றவைகளை மனிதனை அடித்துக் கொண்டு செல்லுமாயின் அவன் அல்லது அவற்றையுடையான் மரணமாவன். அப் பொருள்களின்மேல் மலர் அல்லது மலர்போன்ற பொருள்களை எறியுமாயின் அப் பொருள்களை யுடையவன் பெருமை யெய்துவான். காகத்தின் எச்சம் மேல்விழுமாயின் அவர்க்கு உணவு கிடைக்கும்.

மழைக் காலத்து, பாலுள்ள மரம், மருத மரம், அசோகு, ஆற்றங்கரை, மணல் திட்டு ஆகிய இடங்களில் அமர்ந்து காகம் கத்துமாயின் நல்லமழை பொழியும். மற்றைய பருவங்களிலாயின் மேகம்கூடும். மழைக்காலத்தில் காகம் புழுதியாடினும் நீராடினும் மழையுண்டாம். மற்றைய பருவங்களிலாயின் குளிர்ச்சி மிகும். காகம் மரப்பொந்துகளி லிருந்து கத்துமாயின் தீங்குண்டாம். தண்ணீரை நோக்கியேனும் மழைஇடியை நோக்கியேனும், கத்துமாயின் மழையுண்டு. ஒருகிளையில் காகம், தன் அலகுதாக்க நோயுண்டாகிச் சிறகுகளை அடித்துக்கொண்டு வருந்துமாயின் நெருப்பினால் துன்பம் உண்டாம். அது சிவந்ததோர் பொருள், எரிந்ததோர் பொருள், புல் அல்லது கட்டைகளை ஒரு வீட்டில் கொண்டுவந்து போடுமாயின் அவ் வீடு எரியுண்ணும்.

காகம் இடதுபுறமிருந்து வலதுபுறமாகச் சென்றால் வழிச் செல்வோருக்கு உறவினர்களால் துன்பமுண்டாம். வலதுபுறமிருந்து இடது

புறமாகச் சென்றால் பகைவர்களால் துன்பமுண்டாம்! இடம் வலமாக மயங்கிச்செல்லுமாயின் காற்றினால் துன்பம். காகம் அலகையுயர்த்திச் சிறகுகளை அடித்துக் கொள்ளுமாயின் வழிச் செல்வோருக்குத் துன்பமுண்டாம். தானியங்களைத் திருடிக்கொண்டிருந்தால் பஞ்சம்; சேனைக்குரிய பொருள்களைத் தீண்டுமாயின் போர் மூளும். காகம் குயிலை யொத்த கரியநிறமுடையதாயின் கள்ளராலச்சம். காகம் தன் அலகில் மணல், தானியம், ஈரக் களிமண், மலர் அல்லது இவை போன்ற பொருள்களைக் கொண்டிருந்தால் தனம் கிடைக்கும். மக்கள் வசிக்குமிடத்திலிருந்து பாத்திரங்களை எடுத்துச் செல்லுமாயின், துன்பமுண்டாம். காகம் ஒரு பொருளோடு தன் அருகில் வருமானால் வழிச்செல்வோருக்குப் பொருள் கிடைக்கும். காகம் தன் அருகிலுள்ள பொருளை எடுத்துச் செல்லுமானால் அவன் கைப்பொருள் சேரும். அப் பொருள் மஞ்சள் நிறமுடையதாயின் பொன் போன்றவையாம். பருத்தியாயின் ஆடையாம்; வெண்மையாயின் வெள்ளியாம்.

காகம் ஒரு வீட்டிலிருந்து கிழக்கே சூரியனை நோக்கிக் கத்துமாயின் அரசராலும், தெற்கு நோக்கிக் கத்துமாயின் திருடர்களாலும், மேற்கு நோக்கிக் கத்துமாயின் சிறைப்படுதலாலும், வடக்கு நோக்கிக் கத்துமாயின் சண்டையினாலும் துன்பமுண்டாம். நேர்த்திசைகளிலன்றி மூலைகளை நோக்கிக் கத்துமாயின் விலங்குகள் துன்பமடையும் அல்லது விலங்குகளால் அவ் வீட்டுக்குடையவன் துன்பமடைவான். காகம் கிழக்கு நோக்கிக் கத்துமாயின் அரசியலாரை அல்லது நண்பர்களைச் சந்திப்பான்; பொன் கிடைக்கும்; இனிய உணவு கிடைக்கும். தென்கிழக்கு நோக்கிக் கத்துமாயின் பொற்கொல்லர்களை, இளம்பெண்களைச் சந்திப்பன்; உயர்ந்த உலோகம் கிடைக்கும். தெற்கு நோக்கிக் கத்துமாயின் உளுந்து, கொள் சம்பந்தமான உணவுகிடைக்கும்; இசைவாணர்களைச் சந்திப்பன். தென்மேற்கு நோக்கிக் கத்துமாயின் ஏவலர், குதிரை, தயிர், எண்ணெய், இறைச்சி, உணவு முதலியன கிடைக்கும். மேற்கு நோக்கிக் கத்துமாயின் இறைச்சி, தேறல், தானியம், கிடைக்கும். வடமேற்கு நோக்கிக் கத்துமாயின், ஆயுதங்கள், தாமரை மலர், கொடிகளில்விளையும் பழங்கள், உணவு கிடைக்கும். வடக்கு நோக்கிக் கத்துமாயின் பால், குதிரை, ஆடை முதலியன கிடைக்கும். வட

கிழக்கு நோக்கிக் கத்துமாயின் நெய்யில் தயாரித்த தின் பண்டங்கள் கிடைக்கும்; காளைகள் கிடைக்கும். இவ்விதம் எவ்வீட்டுக் கூரையி லிருந்து காகம் கத்துகிறதோ அவ்வீட்டுக்குரியவனுக்குக் கிடைக்கும்.

வழிச் செல்வோனது காதோரமாகக் காகம் செல்லுமாயின் அவன் உடல் நலத்தோடிருப்பன்; ஆனால் மேற்கொண்ட செயலில் வெற்றி கிடைக்காது. வழிச் செல்லும்போது தன் எதிரே நேராகக் காகம் கத்திக் கொண்டு வருமாயின் பிரயாணத்துக்குத் தடையுண்டாம். வழிச் செல்வோனது இடது பக்கத்தில் முதலில் கத்திய காகம், பிறகு அவனது வலது பக்கம் சென்று கத்துமாயின் கள்ளாலச்சம். முதலில் வலது பக்கத்திலும் பிறகு இடது பக்கத்திலும் கத்துமாயின் தன லாபமுண்டாம் அவனது இடது பக்கத்தில் தொடர்ச்சியாகக் கத்திக் கொண்டிருந்து, பிறகு அப்பக்கமாகவே பறந்து செல்லுமாயின் தன லாபமுண்டாம். இவ்வாறு வலது பக்கத்தில் கத்தினால் கீழ் நாட்டவர்கள் நன்மை யுண்டென்பர். இடது பக்கத்தில் கத்திய காகம் வலது புறம் சென்றால் பிரயாணம் தடைபடும். முதலில் வலது பக்கத்தில் கத்திப் பின் இடது பக்கம் சென்று கத்துமாயின் வழிச்செல்வோனுக்கு நினைத்தது கைகூடும். அவனுக்கு முன்னால் கத்திக்கொண்டே பறந்து செல்லுமானால் விரைவில் தன லாபம். முதலில் அவனுக்குப் பின்னால் இருந்து கத்திப் பின் வலது பக்கமாகவே பறந்து செல்லுமாயினும், ஒற்றைக் காலில் அவனெதிரில் நின்றுகொண்டு சூரியனை நோக்கிக் கத்துமாயினும் அவன் நோயுறுவான். ஒற்றைக்காலில் நின்றுகொண்டு அலகினால் தன் சிறகினைக் கோதிக்கொண்டு சூரியனை நோக்கி இருக்குமாயின் மக்கள் மடிவர். ஊரெல்லையில் முறையின்றிக் கத்திக் கொண்டிருக்குமாயின் வழிச்செல்வோன் துன்புறுவன்.

காகம் நல்லகனிகளோடு கூடிய மரத்தில், பாலுள்ள மரத்தில், பட்டுப் போகாத மரத்தில், நல்ல தோற்றமுடைய மரத்தில், நறுமணம் கமழும் மரத்தில் இலை, அரும்பு, மலர், கனிகளைக் கோதிக்கொண்டு கத்துமாயின் தனலாபம். நன்கு விளைந்த பயிரோடு கூடிய வயல்கள், பசும் புல், வீடு, கோயில், அரண்மனை, உயர்ந்த இடம், பழமையான பொருள்கள், புனிதமான இடம் ஆகிய இடங்களிலிருந்து கத்துமாயின் பொருள் சேரும். பசுவின் வாலிலாவது எறும்புப்புற்றிலாவது இருந்து

கத்துமாயின் பாம்பு காணப்படும். எருமை மீதிருந்து கத்துமாயின் அந்நாளிலேயே ஜுரம் வரும். புதரிலிருந்து கத்துமாயின் பிரயாணத்தைக் கைவிடுதல் நல்லது. வழிச் செல்வோனுக்கு இடது பக்கத்தில் வைக்கோற் போரிலாவது நீரிலாவது இருந்து கத்துமாயின் அவனது செயல்கள் வீணாகும். மின்னலால் அல்லது நெருப்பால் வெந்த மரத்திலிருந்து கத்துமாயின் மரணமுண்டாம். புனிதமான முள்ளுடைய மரத்தில் காகம் இருந்து கத்துமாயின் செயலில் வெற்றியுண்டு; ஆனால் பூசலும் நிகழும். முள்ளுடைய மரத்திலாயின் பூசலுண்டு. கொடிகளாற் சுற்றப்பட்ட மரத்திலாயின் சிறைப்படுவான். நுனிப்பகுதி பிளவுபட்ட மரத்தில் இருந்து கத்துமாயின் கால் முறிபடும். வாடிய மரத்திலாயின் பூசலுண்டு. அவனுக்கு முன்னோ பின்னோ பசுஞ்சாணத்திலிருந்து கத்துமாயின் பொருள்சேரும். பிணத்தின்மேலிருந்து கத்துமாயின் மரண பயம். தன் அலகினால் எலும்பை முறித்துக் கொண்டு கத்திக்கொண்டிருக்குமாயின் அவனது எலும்பு முறிபடும்.

காகம் தன் அலகில் கயிற்றை வைத்துக்கொண்டு கத்துமாயின் பாம்பினால் அச்சம். எலும்போடிருக்குமாயின் நோய் வரும். குச்சிகளோடிருப்பின் கொம்புள்ள மிருகங்களால் அச்சம். முள்ளோடிருக்குமாயின் கள்ளராலச்சம். அழுக்குப் பொருள் அழுகிய பொருள்களாயின் ஆயுதங்களால் அச்சம். மயிரோடிருப்பின் நெருப்பாலச்சம். தனது அலகில் வெள்ளை மலர் அல்லது இறைச்சியை வைத்துக் கொண்டு கத்துமாயின் நினைத்துச் செல்லும் செயல் கைகூடும். அடிக்கடி சிறகுகளை உயர்த்திக்கொண்டு தலைநிமிர்ந்து கத்துமாயின் பிரயாணத்துக்கு இடையூறுண்டாம். தனது வாயில் சங்கிலி, கச்சை (strap), கொடிகளை வைத்துக்கொண்டு கத்துமாயின் சிறைபடுவான். கல்மேலிருந்து கத்துமாயின் அச்சமுண்டு; வருந்துகின்ற ஒருவனைச் சந்திப்பன். இரண்டு காகங்கள் தம் அலகினால் உணவுப் பொருளைப் பரிமாறிக் கொள்ளுமாயின் அவனுக்கு மகிழ்ச்சி மிகும். ஒரே சமயத்தில் ஆண் காகமும் பெண் காகமும் கத்துமாயின் பெண் கிடைக்கும்.

ஒரு பெண்ணின் தலைமீதுள்ள நிறைகுடத்தின்மேல் காகம் உட்கார்ந்திருக்குமாயின் வழிச்செல்வோன் பெண்ணொடு பொருளும் பெறுவன். காகம் அக் குடத்தில் அலகினால் தீண்டுமாயின் அவன் மகனுக்குத் துன்பமுண்டாம். அக் குடத்தின்மேல் எச்சமிட்டிருப் பின் அவனுக்கு உணவு கிடைக்கும். ஓரிடத்தில் சென்று தங்கும் போது காகம் தனது சிறகுகளை அடித்துக்கொண்டிருக்குமாயின் அவ் விடம் நிலைக்காது; மாறுதலுண்டு. சிறகுகளை அடித்துக் கொள்ளா திருக்குமாயின் அச்சம் மாத்திரம் உண்டு. பன்றியின் மேல் இரண்டு காகங்களிருப்பின் சிறைபடுதலுண்டு. சேறு படிந்த உடலோடு கூடின பன்றியின் மேலாயின் பொருள் சேரும். கழுதை அல்லது ஒட்டகத் தின் மேலாயின் மகிழ்ச்சி யுண்டாம். சிலர் கொள்கையின்படி கழுதை யின் மேலாயின் மரணமுண்டு. குதிரையின் முதுகிலிருந்து கத்துமா யின், ஊர்தியோடு வருவன். வழிச்செல்வோனைப் பின்தொடர்ந்து கத் திக்கொண்டு செல்லுமாயின் அவனது இரத்தம் சிந்தும். வேறு பறவைகள் இவ்வாறு தொடரினும் இதே பலன்தான்.

காகம் தனது கூட்டிலிருந்து 'கா' என்று கத்துமாயின் அதனால் பயனில்லை. 'கவா' என்று கத்துமாயின் மகிழ்ச்சியுண்டு. 'க' என்று கத்துமாயின் ஆர்வலரைச் சந்திப்பன். 'கார' எனின் பூசலுண்டு. 'குருகுரு' எனின் மகிழ்ச்சியுண்டு. 'கடகட' எனின் தயிர்ச்சோறுண்டு. 'கெகெ' அல்லது 'கு கு' எனின் பொருள் சேரும். 'கரேகரே' (Khare Khare) எனின் ஒருவர் வருவார் (விருந்துவரும்). 'கக்கக்க' எனின் வழிச்செல்வோன் மரணம். 'ஆ' என்னும் ஒலி பிரயாணத்தைத் தடுக்கிறது. 'கக்கலா' எனின் விரைவில் மழையுண்டு. 'க-க' எனின் அழிவுண்டாம். 'காகடி' எனின் உணவு அழியும். 'கவாகவா' எனின் கட்டுக்கொள்ளுதலுண்டு. 'ககு' (Kagaku) எனின் சிறைபடுதலுண்டு. 'காகவ்' (Karagau) எனின் மழையுண்டு. 'குடா' (Guda) எனின் அச்சமுண்டாம் 'வத்' (Vad) எனின் ஆடை சேரும். 'கலய' எனின் தாழ்ந்தோர் உயர்ந்தோரொடு கட்புக்கொள்வர். 'கட்' (Kad) எனின்

எண்ணிய பொருள் கிடைக்கும், ஆயினும் பாம்பு காணப்படும். 'தட்' (Tad) எனின் அடிபடுவான். 'ஸ்த்ரீ' எனின் பெண் சேர்வள். 'கட்' (Gud) எனின் பசுக்கள் சேரும். 'புட்' (Pud) எனின் மலர்கள்கிடைக்கும். 'டாகுடாகு' எனின் சண்டையுண்டு. 'குஹூ' (Guhu) எனின் நெருப்பினால் அச்சம், 'கூட் கூட்' எனின் சண்டையுண்டு. 'சிண்டிசி' (Chindichi) 'க-க-க', 'பூரா', 'டாகுடாகு' எனின் தீமை தரும் செயல்கள் நிகழும். காகத்திற்குச் சொன்னவைகளே மற்றப் பறவைகளுக்குமாம்.

தரையில்வாழ் பறவைகள் நீரிலும் நீர்வாழ் பறவைகள் தரையிலும் மழைக்காலத்தில் காணப்படுமாயின் அதிக மழையுண்டாம். மற்றைய பருவங்களிலாயின் தீங்குண்டாம். வீட்டில் தேனீ கூடு கட்டுமாயின் வீட்டிற்குத் தீங்குண்டாம். நீலநிற ஈக்கள் (வண்டுகள்) தலைக்கு மேல் வருமாயின் மரணம். எறும்பு நீரில் முட்டையிடுமானால் நீரின்மையுண்டாம். பள்ளத்திலிருந்து மேட்டுக்கு அல்லது மரத்திற்கு முட்டைகளை எடுத்துச் செல்லுமாயின் மழையுண்டாம்.

மேற்கண்ட செயலின் நிலைமையை இங்ஙனம் தொடக்கத்திருந்தே அறியலாம். இடையில் நேரும் சகுனத்தின் பயன் அந் நாளிலேயே புலனும். புதிதாக வேலையை மேற்கொள்ளுதல், பிரயாணம், புது வீடு புகுதல் முதலிய சமயங்களில் இவ்வாறு பயனறிந்து கொள்க. ஆனால், தும்மல் நன்கு கவனிக்கப்பட வேண்டும்; அது நற்சகுனமன்று. நற்சகுனங்கள் நல்ல பயன் கிடைக்குமென்பதைக் காட்டுகின்றன. சிலர் கொள்கையின்படி சுமார் இரண்டு மைல் (ஒரு குரோசம்) தூரத்திற்கு மேல் சகுனம் கவனிக்க வேண்டுவதில்லை. முதற் சகுனம் தீயதாயின் பதினொரு பிராணாயாமம் செய்யவும். இரண்டாவதும் சகுனம் தீயதாயின் பதினாறு பிராணாயாமம் செய்யவும். மூன்றாவது முறையும் தீயதாயின் வீடு திரும்பவும்.

வளருந் தமிழ்

வித்துவான் பண்டிதர் திரு, கா. பொ. இரத்தினம் அவர்கள், M. A. கொழும்பு.

(159-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினேழாம் நூற்றாண்டு—பிற்பகுதி

வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம் கல்விகற்றவர்களுள் மிகவும் சிறந்து விளங்கியவர் கற்பனைக்களஞ்சியம் எனப் போற்றப்படும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். திருவெங்கைக் கோவை, திருவெங்கை யுலா, வெங்கைக் கலம்பகம், நால்வர் நான்மணி மாலை, சோணசைலமாலை, சதமணிமாலை, திருக்கூவப் புராணம், பிரபுலிங்க லீலை, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, பழமலை அந்தாதி, சீகாளத்திப் புராணத்தில் இரு சருக்கம் முதலியவற்றையும், சிவஞான பாலையர் மீது நெஞ்சுவிடு தூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம் முதலியவற்றையும் பாடியுளர். இவருடைய தம்பியர்களாகிய கருணைப் பிரகாசரும் வேலையரும் சிறந்த புலமைபடைத்து விளங்கினர். கருணைப் பிரகாசர் இட்டலிங்க அகவல், சீகாளத்திப்புராணத்திலொரு பகுதி முதலியவற்றையும், வேலையசுவாமிகள் நல்லூர்ப் புராணம், இட்டலிங்க கைத்தலமாலை, வீரசிங்காதன புராணம், முதலிய பல நூல்களையும் சீகாளத்திப் புராணத்தில்[1] கடைசி இருசருக்கங்களையும் பாடினர். திருப்பேரூர்ச் சிவப்பிரகாசரின் மைத்துனராகிய சாந்தலிங்க சுவாமிகள் வைராக்கிய சதகம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல், வைராக்கிய தீபம் முதலியவற்றை ஆக்கினர். நீதிசாரம், ஆசௌச தீபிகை, சந்திரகலாமாலை, பிராயச்சித்த சமுச்சயம் முதலிய நூல்களை யியற்றிய தமிழாகர முனிவரும், கந்தபுராணச் சுருக்கத்தினைப் பாடிய சம்பந்த சரணாலய முனிவரும், திருச்செந்தூர்ப் புராணத்தைச் செய்த வென்றிமலைக் கவிராயரும், வடமலை வெண்பாவினைத் தந்த

---

[1] சீகாளத்திப் புராணத்திலே பத்துச்சருக்கங்கள் உள. நக்கீரச் சருக்கம், கண்ணப்பச் சருக்கம் எனும் இரண்டையும் சிவப்பிரகாசரும், கன்னியர் சருக்கம், சிலந்திபூதல் முற்கதைச் சருக்கம் எனுமிரண்டையும் இவரும், ஏனையவற்றைக் கருணைப்பிரகாசரும் பாடினர்.

பர்கை அழகப்பரும் இக் காலத்தவரே. இந்த நூற்றாண்டிலே இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதிமன்னர்கள் தமிழ்ப்பற்றுமிக்கவர்களாய்ப் புலவர்கள் பலரை ஆதரித்து வந்தனர். இவர்களால் ஆதரிக்கப்பட்டவருள் அமிர்த கவிராயர் என்பார் ஒருதுறைக்கோவை எனும் நூலை இயற்றினர்; அழகிய சிற்றம்பலக் கவிராயர் இரகுநாதசேதுபதியின் பெருமைகளை வியந்து தளசிங்கமாலை எனும் நூலைப் பாடினர். வெங்களப்ப நாயக்கர் குறவஞ்சியும் இவரால் இயற்றப்பட்டதே. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் எனும் திருமங்கை மணவாள தாசர்[1] அழகர் அந்தாதி திருவரங்கத்து மாலை முதலியன இயற்றினர். கயத்தாற்றுச் சீமையின் தலைவராக விளங்கிய மாதைத் திருவேங்கட நாதர் சிறந்த வள்ளலும் தமிழ்ப் புலவருமாக இலங்கினர். இவர் வடமொழியில் கிருஷ்ணமிசிரர் இயற்றிய பிரபோதசந்திரோதயத்தை மொழிபெயர்த்து மெய்ஞ்ஞான விளக்கம்[2] எனும் நூலை இயற்றினர். இவரால் ஆதரிக்கப் பட்ட வைத்தியநாத தேசிகர் குட்டித்தொல்காப்பியம் எனப் போற்றப்படும் இலக்கண விளக்கத்தை இயற்றிப் பெரும்புகழ் ஈட்டினர். பாசவதைப்பரணி, நல்லூர்ப் புராணம், திருவாரூர்ப்பன்மணி மாலை, மயிலம் பிள்ளைத்தமிழ், திருவாட் போக்கிப் புராணம் முதலிய நூல்களுக்கும் தேசிகர் ஆசிரியராவார். திருவேங்கடநாதரால் போற்றப்பட்ட புலவர்களுள் அந்தகக்கவி வீரராகவ முதலியாரும் ஒருவராவார். பிறவிக் குருடராயினும் தம் முயற்சியால் தமிழ்ப்புலமை நிரம்பி விளங்கிய தனிப்பெருமை முதலியாருக்குரியது. இவர் யாழ்ப்பாணத்துக்கும் வந்து அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசிங்க மன்னரிடம் பரிசுகளும் பெற்றுள்ளனர். பல தனிப்பாடல்களையும், திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்றத்துலா, திருவாரூருலா,

---

[1] மணவாளதாசர் எனும் பெயருடையார் நால்வர்இருந்தனர் எனவும், நால்வரும் பாடிய நூல்களே அஷ்டப் பிரபந்தம் என இப்பொழுது வழங்கப் படுகிறது எனவும் கூறுவர். அஷ்டப் பிரபந்தங்களாவன:—அழகரந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கட மாலை, திருவருங்கத்தந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி, திருவரங்கத் தூசற்றிருநாமம்.

[2] இதனை இயற்றியவர் வைத்தியநாததேசிகர் என்பாருமுளர்.

சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், கயத்தாற்றரசனுலா, சந்திரவாணன் கோவை முதலிய பல நூல்களையும் இவர் பாடியுள்ளார். பரராசசேகரனின் மருமகனாகிய அரசகேசரி இரகுவம்சம் எனும் நூலை இயற்றிப் புகழ் பெற்றார்.

இந் நூற்றாண்டின் பிற்பகுதியில் எட்டயபுர சமஸ்தானமும் புலவர்களை ஆதரித்து வந்தது. இச் சமஸ்தானத்திலே போற்றப்பட்ட கடிகைமுத்துப் புலவர் சமுத்திர விலாசம், காமரச மஞ்சரி, திக்கு விசயம், மதனவித்தார மாலை முதலியவற்றை இயற்றினார். இவருடைய மாணவராகிய உமறுப்புலவர் எனும் முகம்மதியப் புலவர் சீறாப்புராணத்தைப் பாடினார்.

சந்தப்பாடல்களைப் பாடுவதில் புகழ்பெற்று விளங்கிய படிக்காசுப் புலவர்[1] பரம்பலங்காரர் வருக்கக் கோவை, உமையபாகர் பதிகம், தொண்டைமண்டலசதகம் முதலிய பல நூல்களையும் தனிச்செய்யுள்கள் பலவற்றையும் பாடியுள்ளார். திருச்செந்தூர்க் கோவையினை இயற்றிய சர்க்கரைப் புலவரும், ஆண்டவன் பிள்ளைத்தமிழ் பாடிய சவ்வாதுப் புலவரும் இக் காலத்தில் வாழ்ந்தனர்.

வடமொழி யின்றித் தமிழ் இயங்காது என்று கூறத்தக்க அளவுக்கு வடசொற்களும் வடமொழி இலக்கணமும் தமிழிலே இடம் பெற்றன. பிரயோகவிவேக மெனும் நூலை இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதர் வடமொழி யிலக்கணத்தைத் தமிழிலே புகுத்தினார். ஈசான தேசிகர் எனும் சாமிநாத முனிவர் "ஐந்தெழுத் தாலொரு பாடையென் றறையவும் நாணுவர்"[2] என்று தமிழைப் பழித்து "வடமொழி தமிழ் மொழி எனுமிரு மொழியினும் இலக்கண மொன்றே" என்றும் உரைத்தார். இவர் திருச்செந்திற் கலம்பகம், தசகாரியம், இலக்கணக்கொத்து முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

---

[1] மட்டாரும் தென்களந்தைப் படிக்காச னுரைத்ததமிழ் வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு முலகும் பரிமளிக்கும் பரிந்த வேட்டைத்
தொட்டாலுங் கைமணக்குஞ் சொன்னாலும் வாய்மணக்குந் துய்யசேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினுமு ளினந்தானே.

[2] இலக்கணக் கொத்து.

பதினெட்டாம் நூற்றாண்டு—முற்பகுதி

இந்த நூற்றாண்டிலே தமிழ்உரைநடை வளர்ச்சியடைந்தது; நாடக நூல்கள் பல தோன்றின; ஐரோப்பியர்களுடைய தொடர்பு தமிழ்நாட்டுக்கு உண்டாயிற்று. பிருத்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இந்தியாவிலே நிறுவப்பட்டு ஓங்கி வளர்ந்தது. கிறித்து சமயம் தமிழகத்திலே பரவத்தொடங்கிற்று. இத்தாலியநாட்டிலிருந்து வந்த பெஸ்கி எனும் பாதிரியார் வீரமாமுனிவர் எனும் பெயர்பூண்டு, தமிழைக் கற்றுப் புலமைபெற்றுக் கிறித்து சமயத்தைப் பரப்பினார். இவர் தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுரகராதி, வேதியரொழுக்கம், அவிவேகபூரணகுரு கதை முதலியவற்றை இயற்றினார்.

சைவத்தை இந் நூற்றாண்டின் தொடக்கத்திலே வளர்த்த பெரியார் தாயுமானவராவார். இவர் அருள்நலங்கனிந்த பாடல்களைப் பாடினார்; அவை இப்பொழுது தாயுமானவர் பாடலென வழங்கப் படுகின்றன. திருப்பேரூர் மடத்தில் வாழ்ந்த சிதம்பரசுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம், திருப்பேரூர்ச் சன்னிதிமுறை, உபதேசக்கட்டளை முதலிய பல நூல்களை இயற்றினார். அருணகிரிப் புராணத்தைப் புனைந்த தில்லை மறைஞானதேசிகரும், உபதேசகாண்டத்தைப் பாடிய கோனேரியப்ப முதலியாரும், ஒழிவிலொடுக்க ஆசிரியராகிய கண்ணுடை வள்ளலும் இக் காலத்தவர்களே. சிதம்பரநாதமுனிவர் நித்திய கன்மநெறியினை இயற்றியும், மதுர கவிராயர் திருக்கச்சூர் நொண்டி நாடகத்தைச் செய்தும், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் அழகர் கிள்ளைவிடுதூது பாடியும் தமிழை வளர்த்ததும் இந்தக் காலத்திலேயாகும்.

வில்லிபாரதத்தைப் பெருப்பித்து நல்லாப்பிள்ளை பாரதம் என்று தம் பெயர்கொடுத்த புலவர் நல்லாப்பிள்ளையும், கற்றோர் யாவரும் போற்றும் குற்றாலக் குறவஞ்சியினை மாத்திரமன்றிக் குற்றாலத் தலபுராணம், குற்றால மாலை, குற்றாலச் சிலேடை முதலியவற்றையும் பாடிய திரிகூடராசப்ப கவிராயரும், நன்னூலுக்கு உரைகண்ட சங்கர நமச்சிவாயரும், இந் நூற்றாண்டின் முற்பகுதிக்குப் பெருமை அளித்தனர்.

இராம நாடகத்தை இயற்றி நாடகத் தமிழைப் புதுப்பித்த அருணாசலக் கவிராயர் சீகாழிக் கோவை முதலியவற்றையும் இயற்றினார். ஒப்பிலாமணிப் புலவர் சிவாகசியத்தையும், அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியையும், வரதபண்டிதர் சிவராத்திரி புராணத்தையும், அருமருந்து தேசிகர் அரும்பொருள் விளக்க நிகண்டினையும், சடகோப தாசர் அரிசமய தீபத்தையும், பகழிக்கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழையும், சாந்திக் கவிராயர் இரங்கேச வெண்பாவினையும், சாந்துப் புலவர் மயூரகிரிக் கோவையினையும் பாடினார்கள். [1] சதக நூல்கள் பல இக் காலத்திலே தோன்றின. பழமொழி விளக்கம் எனும் தண்டலையார் சதகத்தைச் சாந்நிலிங்க கவிராயரும் அறப்பளீசுரசதகத்தை அம்பலவாண கவிராயரும், திருவேங்கட சதகத்தை நாராயண பாரதியும், குமரேச சதகத்தைக் குருபாததாசரும், எம்பிரான் சதகத்தைக் கோபால கிருட்டின தாசரும், இயற்றினார். ஞானக்கூத்தர் நவின்ற விருத்தாசல புராணமும், மார்க்கசகாயதேவர் தந்த திருவிரிஞ்சைமுருகன் பிள்ளைத் தமிழும், மாசிமுத்துப் பிள்ளை பாடிய புலியூர்வெண்பாவும் இக் காலத்தனவே.

யாழ்ப்பாணத்திலும் இந்நூற்றாண்டிலே பலபுலவர்கள் வாழ்ந்தனர்.[2] மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி, காரை வேலன் கோவை, பருளைப் பள்ளு முதலியவற்றைச் சின்னத்தம்பிப் புலவர் பாடினார். புலியூர் யமக அந்தாதி, சிற்றம்பலப்புலவர் கிள்ளைவிடுதூது முதலியவற்றை மயில்வாகனப் புலவர் இயற்றினார். பிலிப்பு டீதமெல்லோ என்பவர் புதிய ஏற்பாட்டினைத் தமிழிலே மொழிபெயர்த்துப் பதிப்பித்தார்.

(தொடரும்)

---

[1] நூறு செய்யுள்கள் கொண்ட நூல்கள்.

[2] "ஈழமும் தமிழும்' எனும் எமது நூலிலே விரிவாகக் காண்க.

தமிழ்ச் சௌந்தரியலகரி ஆராய்ச்சி

திரு. பண்டித-இராமசுப்பிரமணிய நாவலரவர்கள்,
செந்தமிழ் நிலையம், தக்கலை.

(252-ம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழ் மொழிபெயர்ப்பு

தமிழில் சௌந்தரியலகரியை மொழிபெயர்த்தவர் வீரைக் கவிராசபண்டிதர் என்பார். இவர் சேதுநாட்டு வீரசோழன் என்னும் ஊரிற் பிறந்தவர் என்றும், தேவியருள் பெற்றவர் என்றும், மதுரை மீனாட்சியம்மையின் அடியில் இட்டமாலை முடிக்கேறும்படி பாடிப் பரிசுபெற்றவர் என்றுங் கூறுவர்.

சௌந்தரியலகரியைச் செய்யுள்வடிவிலேயே தமிழிற் செய்தமை இவரது அரும்புலமைக்குச் சான்றாகும். இவரது காலம் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகட்குமுன் எனக் கூறப்படுகின்றது.

தமிழ்ச் சௌந்தரியலகரிக்கு உரையெழுதினவர் திவ்யகவி சைவ-எல்லப்பநாவலர் என்பார். இவர் பல செய்யுள் நூல்களுக்கு ஆசிரியர். திருவருணைக் கலம்பகம் முதலியன இவரது கல்விப் பெருமையை விளக்கும். கலம்பகம் பாடுவதில் இவர்க்குச் சிறந்த திறமையுண்டு. இவர் பல புராணங்களும் பாடியுள்ளார். இவரது காலம் பதினேழாநூற்றாண்டு என்பர்.

மிக நுண்மையும் பரப்புமுடைய கருத்துக்களையமைக்கும் பொழுது ஏற்படும் வருத்தத்தைவிட, அக்கருத்துக்கள் அமைந்த பிறமொழிச் செய்யுட்களைச் செய்யுளிலேயே பெயர்க்கும்பொழுது மிகுந்த வருத்தம் ஏற்படும். அதனால், மொழி பெயர்ப்பவர்க்கு இயல்பாகிய மொழிநடையும் சிறிது வேறுபடும். ஆதலால், இந்நூலில் ஆசிரியரது நடை அரும்பதப்புணர்ப்புத் தொகைகளுமிகுந்து,

பெரும்பாலும் கௌட நெறிப்பட்டுக் கற்றூர்க்குமட்டும் பொருள் விளங்கத்தக்கதாக அமைந்துள்ளது. பண்டிதர் இந்நூலை ஒரு செய் யுட்கு ஒரு செய்யுளாக மொழிபெயர்த்தமை சிறப்புக்கு உரியது.

இத்தகையதோர் அரிய நூலுக்கு உரை இன்றியமையாதது. காவலருடைய உரை ஒவ்வொரு பத அமைதியின் வெளிப்படைப் பொருளையும், நோக்குடைப்பொருளையும், ஒவ்வொருபாட்டிலும் இன்றியமையாது அறியத்தக்க பொருட்குறிப்புக்களையும், உதவு கின்றது. ஆயினும், செய்யுட்கள் வடமொழிக் கருத்தொழுக்கிற்கு இணங்கத் தொடர்ப்பட்டுக்கிடப்பதனல், உரையும் அத்தகைத் தொடர்ப்பட்டுத் தொன்னூற்பயிற்சி சிறிதாயினும் உடையார்க்கு மட்டுமே நன்கு விளங்கத்தக்கதாயுள்ளது. உரையில் ஆசிரியர் தரும் பொருள்விளக்கங்கள் பன்னூல்களையும் வருந்தியாராய்ந்து கண்டு உரைத்தனவாகத் தோற்றவில்லை. அவை வடமொழியுரைநூல்க ளில் நின்றும் இருந்தவாறே பெயர்த்தெடுக்கப்பட்டனவாகவே காணப்படுகின்றன.

வடமொழிக்கவிஞராக விளங்கிய பிரமாதிராயர் விரித்துரைத்த வாறே, கவிராசபண்டிதரும் சௌந்தரியலகரியைத் தமிழிற் செய்வா ராயினர் என்பது பாயிரத்தால் விளங்குகின்றது. பிரமாதிராயரைக் 'கவிராசராசவரோதயன்' என்று கூறுவதனல் அவர் சிறந்த வட மொழிப்புலவர் என்று அறியலாகும். சில செய்யுட்களில் வட மொழிச் செய்யுட்களின் கருத்துக்களை நயம்பட விளக்கியிருப்பத னல், அவை பிரமாதிராயருடைய விரிவுரைகளாகும் என்று கருத இடமுண்டு. ஆசிரியர் அடிநிரப்பும்பொருட்டு வடமொழிநூலில் இல்லாத கருத்துக்களைச் சேர்த்தும், வினிவடிவங்களை மாற்றியும் நீக்கியும் சில கருத்துக்களைத் தொகுத்துரைத்தும் இந்நூலை யாத் துள்ளனர்.

வடசொற்களை மிகுதியாக வழங்கியுள்ளாரேனும் இது மொழி பெயர்ப்பு நூலாகையால், மொழிபெயர்ப்பு நூல்களில் வரக்கடவ

சொற்களினுங் குறைவாகவே அவற்றை ஆசிரியர் வழங்கினரென்பதை நூலமைதியால் அறியலாகும். சிலவிடங்களில் வடசொற்களைச் சிறந்ததமிழிற் பெயர்த்திருக்கின்றனர்.

வடசொற்கள் சிலவற்றைத் தமிழுக்குஏற்ப வடிவை மாற்றாது வழங்குவது பிற்காலவழக்கு. பிற்காலத்தும் புலவர்சிலர் அவ்வாறு வழங்கினாரிலர். கவிராசர் வடமொழிவடிவிலேயே சிலசொற்களையமைத்துள்ளனர். அவை ப்ரபந்தம், ப்ரபை, மாதா, த்யாகம், த்ரிகோணம் முதலியன. சந்தஞ்சிதையாம லிருக்கும்பொருட்டே பிற்காலத்துப் புலவர் இவ்வாறு வழங்கத் தலைப்பட்டனர். கணபணாடவி, மதாசலகும்பம், பரமேசன், ஆகண்டலேசர் என்றாற்போலும் வடமொழிச்சந்திகளையும் ஆசிரியர் வழங்கியுள்ளார். குமாரி (குமரி), சுந்தரி, சத்தி முதலியன வடமொழிக்கும் பொருத்தமான பெண்பாற் பெயர்கள். நாயகி முதலிய பெண்பாற்பெயர்கள் தமிழில் பெரும்புலவர்களாலும் வழங்கப்பட்டுள்ளனவேனும், அவை வடமொழியிலக்கணத்துக்குப் பொருந்தாதவை. தமிழில் அவை வழுவென்று கருதப்படவில்லை. நாயகன் என்பதன் பெண்பாற் பெயர் நாயிகை என்பதாகும். கமலை, அம்பிகை, இந்திரை, விமலை முதலிய சொற்கள் ஆசிரியரால் கருத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. கமலி, அம்பிகி, இந்திரி, விமலி என்றாற்போல்வன வழுவாம். சிவி (சிவை) சிநேகிதி (சிநேகிதை) மித்துரு (மித்திரன்) என்றாற்போல்வனவும் வழுவாம். இவைபோன்ற வழுக்கள் இக்காலப் 'புலவர்' சிலராலும் வழங்கப்படுகின்றன. பாரபரை, பராபரி என இருவடிவும் வழங்குவதுண்டு. கபாலி, காபாலி என்பனவற்றை இவ்வாசிரியர் சத்திக்கு வழங்குகின்றனர். இவை ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகவுங் கொள்ளப்படுவதற்கு உரியன.

ஆனந்தலகரியில் உள்ள நாற்பத்தொரு பாடல்களில் அடங்கிய 'ஸ்வதேகோத்பூதாபி:' என வரும் 30-வது பாட்டிற் கருத்தை

ஆசிரியர் சௌந்தரிய லகரியில் 'அம்மே நின்' என வரும் 99-வது பாட்டில் அமைத்திருக்கிறார். சௌந்தரிய லகரியில் அப் பாடல் இல்லை. தமிழ் ஆனந்த லகரியில் 40 பாடல்களே காணப்படுகின்றன. ஆனந்தலகரியுஞ் சௌந்தரியலகரியுஞ் சேர நூறு பாடல்கள் வடமொழியில் இருக்கின்றன. தமிழில் நூற்றுமூன்று பாடல்கள் காணப்படுகின்றன. சௌந்தரியலகரியில் மூன்று பாடல்கள் மிகுந்திருப்பதே இத் தொகை மிகுதிக்குக் காரணமாம். இறுதிப்பாடல் வடமொழியிலும் தமிழிலும் கருத்தொத்திருப்பதனால், அம் மூன்றும் ஆசிரியர் செய்தவை என்று கருதுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. எனவே, மேற்கூறிய 'ஸ்வதேக' என வரும் பாடலும் இம் மூன்று பாடலும் சௌந்தரியலகரியில் அமைந்திருப்பதொரு வடநூற் சுவடி ஆசிரியரது மொழிபெயர்ப்புக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். 102-வது 'சேமநிதி' என வரும் பாடலில், 'மாமறைபோ லென்பாடல் வண்டமிழுங் கொள்வாயால்' என்பது, வடமொழிக் கேற்பக் கூறப்பட்டிருப்பதைத் தமிழ் நூலுக்கேற்பக் கூறினர் என்று கொள்ளவேண்டும். அன்றியும், சிற்சில பாடல்களில் தம் கருத்தும் ஆசிரியர் சேர்த்திருப்பது போல இதனையும் அமைத்தனர் என்றுங் கொள்ளலாகும். நூற்றுமூன்று பாடல்களுக்குப் புறமாக நூற்பயன் கூறும் ஒரு பாடலுந் தமிழிற் காணப்படுகின்றது.

சௌந்தரியலகரி, ஆசிரியர் தங்கருத்துக்களாலும் பொருணயத்தாலுஞ் சிறந்து விளங்குகின்றதாயினும், மொழிபெயர்ப்பு நெறியில் ஆனந்தலகரியே சிறந்து நிற்கின்றது.

[தொடரும்]

இராமாவதாரத் தனிச்செய்யுள் உரை

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L., மதுரை.

(201-ம் பக்கத்தொடர்ச்சி)

சிறப்புப்பாயிரம்-5.

நொய்தில் நொய்யசொல் நூற்கலுற் றேன்எனை
வைத வைவின் மராமரம் ஏழ்தொளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே.

இதன் பொருள்:—நொய்தின் - இலேசாக, நொய்ய - எளிய, சொல்-வார்த்தைகளை, நூற்கலுற்றேன் - இசைத்துக் கவிபாடத் தொடங்குகிறேன், எனை-இத் தொடக்கம் எத்தன்மைத்து? வைத- (பக்ஷியைக் கொன்ற வேடனை நோக்கி) சபித்த, வைவின் - சாப வாக்கியத்தினின்று, மராமரம் ஏழ் - ஏழு மராமரங்களும், தொளை எய்த-தொளைகளை அடையும்படி, எய்தவற்கு - அம்பைச் செலுத்தியவனுக்கு, எய்திய-வந்தடைந்த, மாக்கதை-லக்ஷ்மீகரமான சரித்திரத்தை, செய்த-இயற்றிய, செய்தவன்-செய்த தவத்தையுடையவனான வால்மீகி பகவானுடைய, சொல்-சொல்லான (இராமாயணம்,) நின்ற - நிலைத்திருக்கிற, தேயத்தே - நாட்டில்: என்றவாறு. ['வைவின்' என்பதில் 'இன்' ஏதுப்பொருள்.]

வேடன் ஒரு அம்பை எய்து, ஒரு புறாவைக் கொன்றான். தவத்திற் சிறந்தவரான வால்மீகி, ஒரு சுலோகத்தால் அந்த வேடனை வைதார். அந்தச் சொல்லிலிருந்து ஒரு பரமமங்களகரமான சரித்திர முண்டாயிற்று. அது ஏழு மராமரங்கள் தொளைபடும்படி ஒரே அம்பினால் எய்த இராமன் அடைந்த லக்ஷ்மீகரமான கதையாயிற்று.

தவத்தில் தலைசிறந்தோர் சொற்கள் அவை குறிக்கும் தீய பயன் அல்லது நல்லபயனை உடனே தரக்கூடியவை. அப் பயனிலிருந்தே அந்தச் சொல் தீயதான நிக்ரஹத்தைக் குறித்த சாபமா? அல்லது நன்மையான அநுக்ரஹத்தைக் குறித்த ஆசிர்வாதமா? என்று உணரக்கிடக்கிறது. வான்மீகி முனிவர் வடமொழியில் முதன்முதல் யாத்த அநுஷ்டுப் சுலோகம் வேடனுக்கு வைதவையாகவும், இராமாயணத்துக்கு மங்கள சுலோகமாகவும் அமைந்தது. இதன் அருமையைக் கவி கம்பநாடர், வான்மீகி பகவான் வாக்கு எத்தகைய மங்களத் தன்மை வாய்ந்தது! என வியந்து கூறுகிறார்.

தீச்செயலால் தன்னெதிரில் ஓர் உயிரைக் கொன்றவனை வைத வசைச்சொற்கூட, அவர் தவத்தின் பெருமையால், மங்களவாக்கான பொருளுடையதாய், மிக அரும்பெரும் பழமை வாய்ந்த வடமொழிக்கே ஆதி காவியமான இராமாயணத்திற்கு முதலில் மங்கள சுலோகமாக அமையுமானால், வான்மீகி முனிவர் வாக்கின் மங்களத் தன்மையை எவ்வாறு மதிப்பது? என்று திகைக்கிறார் மஹாகவி.

இராமாயணம் படிக்குமிடமெல்லாம் கல்வி, செல்வம், ஸந்ததி முதலான எல்லா மங்களப் பொருள்களும் பெருகி, நித்யமான மங்களமுண்டாகிறதென்பது பிரஸித்தம். ஒரு வசவு இத்தகைய நூலுக்குக் காரணமாகுமானால், அந்த மஹரிஷியால் வாழ்த்தப் பெறும் இராமனுக்கு என்ன குறைவுண்டு?

வாலியைக் கொல்லும் வலிமை இராமனம்பிற்கு உண்டோ? என்று சுக்கிரீவன் ஐயமுற்றான். அதனை அகற்ற இராமன், மிகப் பருத்து வானளாவி வளர்ந்திருந்த எழு மராமரங்கள்மேல் ஓர் அம்பு எய்து அவைகளை ஒருசேரத் தொளைத்தான். இதனால் சுக்கிரீவன் ஐயம் அகன்றது. இராமன் பெருமையை விளக்க இந்த அம்புப்பரீக்ஷையைக் குறிப்பிட்ட கம்பர் வால்மீகியின் பெருமையை விளக்க, அவர் வேடனை வைத வசவு இராமனுக்கு மங்கள சுலோகமாக மாறின, இந்தச் சொற்பரீக்ஷையைக் குறிப்பிடுகின்

ஞர். இதனால், இராம கதையினைச் சொல்ல அவ் வான்மீகி முனிவரே தகுதிவாய்ந்தவ ரென்பதை வலியுறுத்தினாராயிற்று.

கம்பரின் இராமகாதையில் பலவிடத்தும் இராமனம்புக்குச் சொல் உவமையாகப் பயின்றுள்ளது.

சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம் (தாடகை வதை. 72)

சொற்கலை யெனத்தொலைவில் அணிகள் சுமந்தார் (மாரீசன் வதை. 54)

கல்வியற் கவிஞர்நாவிற் பொருள்குறித் தமர்ந்தநாமச்
சொல்லெனச் செய்யுள்கொண்ட தொடையெனத் தொடையைநீக்கி
எல்லையில் இன்பந்தீரா இசையெனப் பழுதிலாத
பல்லலங் காரப்பண்பே காகுத்தன் பகழிமாதோ.

(கும்பகர்ணன் வதை. 22)

இன்னோரன்ன மேற்கோள் இங்கே குறிப்பிடத்தக்கவை.

வான்மீகியின் முதல்சுலோகம், வேடனை வைது, இராமாயணத்துக்கு வித்தாகி, லோகங்களுக்கு எல்லாநன்மையையும் பயந்து வருகிறது. இது சொல்லின் பரீக்ஷை. அதுபோல இராமனுடைய அம்பு, மராமரங்கள் ஏழையும் தொளைத்து, அதன் வழியே வாலி—இராவணாதிகளைக் கொன்று மக்கள் தேவர் எல்லோருக்கும் நன்மை பயந்தது. இது அம்பின் பரீக்ஷை.

ஒவ்வொரு எழுத்திலும் ஏற்றும் ஸ்வரங்களின் மேன்மையாலும், சொற்கள் அவ்வித எழுத்துக்களால் இயைக்கப் பெறுதலாலும், அவ்விதம் இயைந்த சொற்களாலாகும் வாக்கியங்கள் மந்திரங்களாவதும், அவற்றின் பிரயோகங்களாலும் ஜப பாராயணங்களாலும், மற்றெவ் வகையாலும் எய்தற்கரிய அரும்பெரும் பயன்கள் எய்துவன வென்பதும், வடமொழிச் சொற்கள் விஷயத்தில் பிரஸித்தம். இம் மந்திரத்தின் பெருமையையும் அதை ஆக்கும் மாபையும்,

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

என்னுஞ் சூத்திரத்தால் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

அவ்விதம் மந்திரச்சொற்களையும் வாக்கியங்களையும் வான்மீகி முனிவர் ஆக்கி, அவற்றால் இராமாயணத்தை இயற்றினார். ஆதலின் அது தெய்வமாக்கவியாய் என்றும் விளங்குகிறது.

அவன் செய்தவத்தையுடையனாதலின், அது எளிதின் இயல்வதாயிற்று. அந்தப் பெருமை எனக்கில்லையாதலின், வெறும் பொருளை மட்டும் தரத்தக்க எளிமையான சொற்களால் இந்தநூலை நூற்கிறேன் என்று கம்பர் குறிப்பிடுகிறார். இதனால் தமிழ்ச்சொற்களின் சேர்க்கையால் மந்திரங்கள் உண்டாகாவோ? என்னும் ஐயமே எழக்கூடாமல், நான் நூற்கத் தொடங்கினேனே என்று அந்தக் குறையைத் தன்மேலேற்றிக் கொள்கிறார். ஏனெனில் திருஞான சம்பந்தர் தமிழ்ப்பாவினால் வேதாரண்யத்தில் மறைக்கதவம் சாத்தியதும், திருமழிசைப் பிரான் பாடலுக்குத் திருக்குடந்தைப் பெருமாள் தலைதூக்கி எழுந்திருக்கத் தொடங்கியதும் கம்பர் காலத்தே மிக்க புகழ் வாய்ந்திருந்த தமிழ்ச் சொற்களின் மந்திரத் தன்மையாதலின், அவ்விதச் சொற்கள் தம்மாலாக்கித்தர இயலாதென்று, கவி மிக்க கவனத்துடன் சொல்லுகிறார். தம் சொல்லை 'பொய்ய சொல்' என்றும், வான்மீகி சொல்லைச் 'செய்தவன் சொல்' என்றும் கூறியுள்ள நயம் நோக்கத் தக்கது.

'நின்ற' என்ற முடிவினால் வேறொரு நயமும் விளங்குகின்றது. வான்மீகி தவமுனியாகையால், மந்திரச் சொற்களால் இராமாயணம் இயற்றினார். அது பல நூற்றாண்டுகளாக இந்த தேசத்தில் நிலை பெற்றிருக்கிறது. நான் பொய்ய சொல்லால் இந்த நூலை நூற்கத் தொடங்குகிறேன். இது எவ்வளவு காலம் நிலைநிற்கும் என்பது தெரியாது. ஆழ்வார்களைப் போலவும் நாயன்மார்களைப் போலவும் மந்திரச் சொற்களால் தமிழில் இராமகதை ஒன்று எழுதப்பெறும் வரை, தன் இராமாயணம் நிற்கும் என்னும் எண்ணத்தோடு தன் சொல்லை, 'பொய்ய சொல்' என்று சொல்லுகிறார்.

ஸ்ரீ:

மகரக்குழையார் திருவாராதனக் கவிகள்

ஸ்ரீ T. N. கிருஷ்ணையங்கார் அவர்கள், (Retired) ஆராய்ச்சியாளர்,
திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

முகவுரை

திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபர்ணி நதிக்கரையிலுள்ள நவ திருப்பதிகளுள் ஒன்றாய் நம்மாழ்வார் பாடல்பெற்ற திவ்யதேசம் 'தென்திருப்பேரெயில்' என்பது. இஃது இக்காலத்துத் தென்திருப்பேரை என வழங்குகிறது. இவ் வூரில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் திருநாமம், மகரநெடுங் குழைக்காதர் என்பது. இவ்வூர் தோன்றுதொட்டே பிரபல முத்தமிழ் வித்துவான்களுக்கும், வடமொழிப் புலவர்களுக்கும், கீதம் வல்லார்களுக்கும் ஜன்மபூமியாய் மிகப் பெருமை வாய்ந்தது. முற்காலத்து, 'முறுவல்' என்னும் நாடகத் தமிழ்நூல் இயற்றிய பேரெயில் முறுவலார், சிந்தாமணியை முற்றுவித்த கந்தியார், மாறன் அலங்கார உரையாசிரியர் காரிரத்ந கவிராயர் போன்ற பெரும் புலவர்கள் இவ்வூரினரே என்பது, புலவர் பெயர், அறிஞருரை செய்யுட்கள் இவற்றால் தெளிவாகிறது. இடைக்காலத்தும் குழைக்காதர் பாமாலை, மகரக்குழையார் பிள்ளைத்தமிழ், ஸந்தானப்பத்து போன்ற பிரபந்தங்கள் பாடிய புலவர் பலர் இவ்வூரினராயிருந்தனரென்பது அப் பிரபந்தங்களால் அறியப்படுகிறது. பிற்காலத்துப் பேரைக் கலம்பகம், திருவரங்கச் சிலேடைமாலை, சந்திரகலாமாலை, கிளிக்கண்ணி, தனிப்பா மஞ்சரி முதலிய பிரபந்தங்கள் பாடி, 'அபிநவ காளமேகம்' என்ற சிறப்புப் பெற்ற கவி ஸ்ரீ அனந்தகிருஷ்ணையங்கார் அவர்களும் இவ் வூரினரே.

இவர்களையன்றி எத்தனையோ பிரபந்தங்கள் பாடிய புலவர்கள் பலர் இவ்வூரில் முற்காலத்தும் இடைக்காலத்தும் இருந்து, அவர்

களின் பெயர்களும் பிரபந்தங்களும் மறைந்து போயினவாம். அவற்றோடு மறைவதற்கிருந்த 'மகரக் குழையார் திருவாராதனக் கவிகள்' தமிழன்பர்களின் புண்யபலத்தினாலே சிதைந்த ரூபத்தோடாயினும் எளியேற்குக் கிடைத்தன.[1] இவற்றின் செய்யுளுறுப்புக்கள் வேறு வேறாகி வெவ்வேறு கவிகளில் சேர்க்கப்பட்டு, ஆங்காங்குச் சிதறுண்டு காணப்பட்டன. இவற்றின் உண்மை உருவத்தை ஒருவாறு ஊகித்து அறிந்து உறுப்புக்களை அவ்வவற்றுக்கு ஆக்கிப் பெரியோரிடம் சில திருத்தங்களும் செய்துகொண்டேன்.

இவற்றின் ஆசிரியர் பெயர் விளங்கவில்லையாயினும், இவ்வூர் நூற்றெண்மரில் ஒருவராக இவர் இருக்கவேண்டுமென்பது "பொற்றருண பங்கய மலர்த்தவிசில் அயனைநேர் பூசுரர்கள் நூற்றெண்மர்தம் புகழால் நிறைந்து" என்றும் (செய்யுள் 1.) "பிரமகுல திலகரொடும் நூற்றெண்மர்" என்றும் (செய்யுள் 3.), நூற்றெண்மரை எதுகை மோனைகளிலிட்டு விதந்துகூறியதோடு அமையாமல், ஈற்றுச்செய்யுளில் முத்திரையிட்டது போல, "எழில்பெரு நூற்றெண்மர் பிள்ளைக் குழாத்தினூடு இருந்துவிளையாடும் அரசே! என்றும், "காக்கும் எம் குலநாதனே"! என்றும் குழைக்காதப் பெருமானை முன்னிலையாக்கி, இவ்வூர்த் தலைகாரணர் பரம்பரையினரான நூற்றெண்மரின் சரித்திரக் குறிப்புத்தோன்றப் பாடியிருத்தலால் ஊகிக்கப் படுகிறது.[2]

---

[1] இவை கிடைக்கும்படி உதவியவர், ஷையூர் ஸ்ரீமாந்-குழைக்காதப்பன் ராமாநுஜன் ஐயங்கார் என்பவர்.

[2] நூற்றெண்மரின் சரித்திரக் குறிப்பாவது:—தென்பாண்டி நாட்டுத் தலைநகரமாகிய கொற்கை மாநகரத்தில் அரசுவீற்றிருந்த சோமசுந்தரப் பெருவழுதி, தனக்கு மகப்பேறில்லாது வருந்தித் தென்திருப்பேரையில் மகரநெடுங்குழைக்காதப் பெருமானை வழிபட, அம்மாயன் அரசன் கனவில் தோன்றி, 'ஸாமசாகா அந்தணர் நூற்றெண்மருக்குப் போதுமான பூஸ்திதியோடு நூற்றெண் கிரஹம் தானம் செய்யின் நின்குறை நீங்கும்' என அவ்வாறே அரசன் பொன்னி நதியின் இருமருங்கிலுமுள்ள பதினெண்கிராமங்

இவர் மலைநாட்டிலும் மிக்க பரிசயமுடையராயிருந்தா ரென்பது, விளையாடலைச் செய்த என்னும் பொருளில் "களிபுசித்த" (செய்யுள். 4) என்றும், விரும்பி நிற்பாள் என்னும் பொருளில் "ஆசித்து நிற்பன்" (செய்யுள். 5) என்றும் மலைநாட்டுச் சொற்களை ஆண்டிருத்தலால் அறியலாகும். இத் திருவாராதனக் கவிகள், மகாநெடுங்குழைக்காதர் ஸந்நிதியில் திருவாராதனை நடக்கும்பொழுது உபசாரமாக, குடை, சாமரம், ஆலவட்டம், ஒலியல், கண்ணாடி இவை ஸமர்ப்பிக்க, முறையே பாடப்பெற்று, தொன்றுதொட்டு அங்கு ஸேவிக்கப்பெற்று வந்தன.

இவற்றுள் முதற்செய்யுள்: வெண்கொற்றக் குடைபற்றிய வர்ணனை. இரண்டாவது: வெண்சாமரை பற்றிய வர்ணனை. மூன்றாவது: ஆலவட்டம் (விசிறி) பற்றிய வர்ணனை. நான்காவது: முறுக்கொலியல் (கனைத்து முறுக்கிப் பிழிந்த வஸ்திரம்) பற்றிய வர்ணனை. ஐந்தாவது: கண்ணாடி வர்ணனை. இனி இவற்றைத் தனித்தனி விவரிப்போமாக.

முதற்செய்யுள்

சுற்றுமெழில் பெற்றிலகு வித்துரும நித்திலத்
தொகையாற் பரம்பி யெங்கும்
சூழ்ந்துதா னிரைத்திடம் இமைத்திட அமைத்திடும்
தொடர்பாற் கடலி தெனலாம்

களினின்று நூற்றெண்மரைக் கொணர்வித்துத் தானஞ்செய்யும் பொழுது, எண்ணிக்கையில் ஒருவர் குறைந்திருந்தமை கண்டு, மனம்வருந்தி வேண்டக் குழைக்காதப் பெருமாளே அவருள் ஒருவராய்த் தானம்பெற்று அங்கு வாழ்ந்துவருகிறார்; என்பது.

பொன்னிநதியின் இருகரைகளிலுமுள்ள பதினெண் கிராமங்களாவன:—

திட்டகுடி அன்பில் திருநண்ணூர் ஆதனூர்
மட்டவிழும் தோவூர் வயலாலி—சிட்டர்திருக்
குன்றமருதூர் குறைதீர்த்தார் அப்பனூர்
என்றவ் வடகரையில் எட்டு.

இடையாற்றி னங்குடிசீர் எப்போதும் வாழூர்
மிடைமணலூர் ஈரைந்தாம் வேலி—புடைபண்ணை
நாணமங்கை பிள்ளைமங்கை நல்லபெரு மாள்மங்கை
பாணமங்கை தென்கரையிற் பத்து.

பற்றும்கொடி தானகால் ஒன்றாகி விளிவிருப்
பதனால்வி சாலத்தினால்
பாரைச் சுமந்தாகி நிற்குமா மேருப்
பருப்பதம் பானுமெனலாம்
பொற்றருண பங்கய மலர்த்தவிசில் அயனோர்
பூசுரர்கள் நூற்றெண்மர்தம்
புகழால் நிறைந்துசெந் திருவினிரு விழியருள்
பொலிந்தசெல் வங்களோங்கிக்
கொற்றமறை தென்மறைமுத் தமிழினொலி பிள்ளைக்
குழாத்தின்விளை யாட்டொலிஅறாக்
கோலமறு கணிதிருப் பேரைவரு மகரக்
குழைக்கடவுள்! நின்கவிகையே.

வித்துருமம் - பவழம். நித்திலம் - முத்து. பரம்பி - பரந்து. இமைத்தல் - பிரகாசித்தல். தொடர் - மாலை, பழமை நூற்றெண்மர் - நூற்றெட்டு ஸ்ரீவைஷ்ணவர், இவர், தலவகார ஸாமவேதியராய் தென்திருப்பேரையில் வாழ்வோர். கொற்றமறை - ஸாமவேதம். தென்மறை — திருவாய்மொழி.

இதன் கருத்து வருமாறு:—அழகுடன் அப்பொழுது அலர்ந்த தாமரைப் பூவாகிற ஆசனத்தில் எழுந்தருளியிருக்கும் பிரம்மாவை ஒப்பான வேதியர் நூற்றெண்மரின் கீர்த்தியினால் நிறைந்ததும், லக்ஷ்மிதேவியின் பூர்ணமான கடாக்ஷத்தால் எல்லா பாக்கியங்களும் மலிந்தும், எப்பொழுதும் திருமாலின் விஜயத்தையே பிரதிபாதிக்கிற ஸாமவேதமும், அதிகாரிபேதமின்றியே அருளிச்செயலான தமிழ்வேதமாகிற திருவாய்மொழியும், இயலிசை நாடகங்களாகிற முத்தமிழும் ஆகிய இவற்றின் ஒலிகளோடு போட்டியிடுவது போன்ற, நூற்றெண்மரின் பிள்ளைக்குழாம் விளையாட்டின் ஒலியும் இடைவிடாமல் முழங்குகிறதுமான தெருக்களோடு கூடிய தென்திருப்பேரெயில் மாநகரத்தில் மகரக்குழையனாகி வீற்றிருந் தருளுகிற பெருமானே! தேவரீருடைய வெண்கொற்றக் குடையானது அதன் மேல்வட்டப் பரப்பின் விளிம்புச் சுற்றில் தொங்குகிற

முத்தும் பவழமும் கோத்த மாலைகள், எங்கும் நிரைந்து அசைந்து ஒலிப்பதனாலும், அவ் வட்டம் இடமெங்கும் பரந்து பிரகாசிப்பதனாலும் திருப்பாற்கடலோ! என்னும்படி யிருக்கிறது. அன்றியும், குடையின்நடுவில் அழகிய பொற்கால் நீண்டிருப்பதனாலும், அதன் மேற்பரப்பு மிக விசாலமாக இருப்பதனாலும், அது இந்தப் பூமியைத் தாங்கிநிற்கிற மஹாமேரு பர்வதமோ! என்னும்படியு மிருக்கிறது: என்பதாம்.

இரண்டாவது செய்யுள்

தெண்டிரை தடங்கரையில் ஒண்பணிலம் எறிந்ததிர்
திருப்பாற் கடற்சூழன்று
திங்களுற மந்தர நெடும்பொழில் எழும்பித்
தெறித்தநுண் துளியீட்டமோ?
புண்டரிகை மணவாள! நீகடையும் அவ்வாழி
பொங்கியெழும் நுரைநீட்சியோ?
புத்தமுத முடனுதித் திட்டசோடச கலா
பூர்ணசந்திர கிரணமோ?
கொண்டல்தவழ் தண்டலையில் அண்டுகடுவன் பலமுட்
குடக்கனி யெடுத்துமடிமேற்
கொண்டுசுளை மொண்டினிதின் உண்டிடக் கற்பகக்
கொம்பில்விளையாடு மந்தி
கண்டுதவெ னக்கென அஃதில் லெனுமுன் வீழ்ந்ததன்
காலிற்பணிந்து கெஞ்சிக்
கைநீட்டி நிற்குமிப் பேரைமகரக் குழைக்
காதைய! நின்கவரியே.

மந்தரநெடும்பொழில் - மந்தரபர்வதத்திலுள்ள நீண்டசோலை. சோடச கலா - பதினாறு கலைகள். பலமுட்குடக்கனி - பரந்த முட்களை யுடையதும், குடம்போன்ற வடிவுள்ளதுமான பலாப்பழம்.

இதன் கருத்து.—மேகங்கள் வந்து கவிந்து தவழ்கிற உயர்ந்த சோலைகளிலுள்ள ஆண்குரங்கு, பரந்த முட்களையுடையதும் குடம்

போன்ற வடிவுள்ளதுமான வருக்கைப் பலாப்பழத்தைப் பறித்தெடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு, அதன் சுளைகளை ஆஸ்வதித்து உண்ண, மீதே கற்பகச்சோலையில் விளையாடிக்கொண்டிருந்த பெண்குரங்கு அதனைக்கண்டு அங்கு இப் பலாப்பழம் இன்மையால், 'இதனை எனக்குக் கொடு' என்கிறதாம். இரப்பவர் மேலேயிருந்து வேண்டல் முறையன்றாகலின், கடுவன் சிரித்துக்கொண்டு 'இல்லை' என்று சொல்லுமுன்னமே, மந்தி கீழிறங்கிவந்து கெஞ்சிக் கைநீட்டிநிற்கக் கடுவன் கொடுக்குமாம் இப்படி மேலுலகத்தோரும் கீழிறங்கிவந்து யாசிக்க, ஈயும் இயல்புவாய்ந்த பேரொயில் மாநகரத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் மகரக்குழையணிந்த பெருமாளே! தேவரீருடைய வெண்சாமரையானது விசாலமான கரையில், ஒள்ளிய வெண்சங்குகளை அலைகள் தெள்ளியெறிந்து முழங்குகிற திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, சந்திரனை அடைதூணிற் பொருந்தி, அக் கடலிற் சுழன்ற மந்தர பர்வதத்திலுள்ள சோலைகள் பரந்து பொங்கியெழுந்ததனால் தெறித்துயர்ந்த பால்துளிகளின்கூட்டமோ? என்னும்படியிருக்கிறது. அன்றியும், திருமாலே! தேவரீர் கடைந்த அப் பாற்கடலிற் பொங்கியெழுந்த நுரைகளின் கூட்டமோ? என்னும்படியும், அக் கடலினின்றும் அமிர்தத்தோடு பிறந்த பூர்ணசந்திரனின் கிரணங்களோ என்னும்படியுமிருக்கிறது: என்பதாம்.

(தொடரும்)